20.02.2025

O.S.No.280/2016

வா.சா.1.திருமதி. ஜானகி க.பெ. கிருஷ்ணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் கூறியதன் அடிப்படையில் தான் எனது வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தை நான் எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து நான் கிரையம் வாங்கியது என்பதால் இந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 3 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணத்தில் 1 ம் பிரதிவாதியும், நல்லமணியும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர் என்று சொல்லவில்லை என்றால் அதில் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ 3 ஆவணத்தில் எந்த பக்கத்தில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக எழுத்து தெரியாமல் படிக்க முடியவில்லை என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ 3 ஆவணம் யாரால் யாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் பழனியாண்டி, நல்லமணி ஆகியோர்களுக்கிடையே அவர்களது குடும்ப சொத்தை பிரித்து கொண்டதாக காணப்படுகிறது. நான் எத்தனை வகுப்புவரை படித்துள்ளேன் என்றால் 4 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ 3 ஆவணம் நல்லமணியும், 1 ம் பிரதிவாதி பழனியாண்டியும் 6 ம் பிரதிவாதி ராக்கமாளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

2. ராக்கம்மாள் முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் வா.சா.ஆ 4 ஆவணத்தை புவனேஷ்வரிக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 வில்லங்க சான்றிதழுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 வில்லங்க சான்றிதழை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்தை அபகரிக்க பிரதிவாதிகள் முற்படுவதால் அதை தாக்கல் செய்துள்ளேன். ராக்கமாளுக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளதால் தான் அவரை தரப்பிரனராக சேர்த்துள்ளேன் என்றால் ராக்கமாளுக்கு உரிமை இருந்துதான் அவர் புவனேஷ்வரிக்கு விற்பனை செய்து அவரிடமிருந்து ஒரு பகுதியை நான் கிரையம் பெற்றுள்ளேன். புவனேஷ்வரிக்கு கிரையம் கொடுத்த சொத்து சர்வே எண்.272/1A எனது கிரைய சொத்து சர்வே எண்.107/4C ஆகும். தாவா சொத்தில் ராக்கம்மாள் எந்த பகுதியில் புவனேஷ்வரிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்து புவனேஷ்வரி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தில் புவனேஷ்வரிக்கு உரிமை உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் ராக்கமாளுக்கு ஆரம்பத்தில் உரிமை இருந்ததா என்றால் இல்லை. தாவாவில் ராக்கமாளை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் ராக்கம்மாளுக்கு பாகம் பிரிவினை மூலம் சொத்து கிடைத்து அதை அவர் விற்றுவிட்டதால் அவரை நான் தரப்பினராக சேர்த்துள்ளேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது)**